සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

51 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

නාට්‍ය හා රංග කලාව I, II
நாடகமும் அரங்கியலும் I, II
Drama and Theatre I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## நாடகமும் அரங்கியலும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

1. காண்பிய வழிச் சித்திரிப்பு என்பது
   (1) உடல் உறுப்புகளால் சித்திரிக்கப்படுவது ஆகும்.
   (2) சொற்களால் அல்லது குரலால் சித்திரிக்கப்படுவது ஆகும்.
   (3) முகபாவங்களால் உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆகும்.
   (4) வேட உடை, ஒப்பனை மற்றும் அரங்கப் பொருட்களால் சித்திரிக்கப் பெறுவதாகும்.

2. நாடகம் என்னும் கலை வடிவம் சடங்கிலிருந்து தோன்றியது எனக் கூறியவர்
   (1) அரிஸ்டோட்டல் (2) தொம்சன் (3) கில்லே பிராண்ட் (4) மாட்டின் எஸ்லின்

3. சித்திரமும் சிற்பமும்
   (1) கட்புலக் கலைகளாகும். (2) செவிப்புலக் கலைகளாகும்.
   (3) கட்புல - செவிப்புலக் கலைகளாகும். (4) ஆற்றுகைக் கலைகளாகும்.

4. ஊமம் தொடர்பான பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டுக்களிலொன்று
   (1) ஆடும் வீடும் (2) குருட்டு ஆட்டோ (3) வெயிற் படுதல் (4) பழக்கலவை

5. நாடகம் ஒன்று நிகழ்த்த மிக அவசியமானது
   (1) மேடை (2) காட்சி (3) இசை (4) நடிகர்

6. பின்வரும் கூற்றுகளில் 'மோதுகை' பற்றிய **தவறான** கூற்று
   (1) நாடகமொன்றின் மோதுகை அதன் கதையினூடாகவே படிப்படியாக விரிவடையும்.
   (2) மோதுகையானது நபர்களுக்கு இடையேயும் தமது உள்ளம், அயற் சமூகம், சூழல் ஆகியவற்றுடனும் ஏற்படலாம்.
   (3) மோதுகையானது கதாநாயகனுக்கும் எதிரிக்கும் இடையே எப்பொழுதும் ஏற்படும்.
   (4) மோதுகையானது புறவாரியாகவோ, அகவாரியாகவோ ஏற்படலாம்.

7. 'மழை' நாடகம் ஒரு முழுமையான
   (1) யதார்த்த மோடி நாடகமாகும். (2) நிருத்திய நாடகமாகும்.
   (3) அபத்த மோடி நாடகமாகும். (4) கற்பித மோடி நாடகமாகும்.

8. 'மழை' நாடகத்தில் பேசப்படும் பிரதான விடயம்
   (1) பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் பெற்றோர் பற்றியதாகும்.
   (2) மனித முயற்சியினால் எதையும் சாதிக்கலாம் என்பதாகும்.
   (3) வேலை இல்லாத இளைஞர்கள் பற்றியதாகும்.
   (4) அன்பின் நிமித்தம் பிள்ளைகளை வற்புறுத்தும் பெற்றோர் பற்றியதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

For More Past Papers : tamilguru.lk

9. பின்வருவனவற்றுள் 'கதவு அடித்துப்பாடுதல்' எனும் நிகழ்வுடன் தொடர்புபட்ட சடங்கு
   (1) மாம்பழத் திருவிழா
   (2) யம சங்காரம்
   (3) வேட்டைத் திருவிழா
   (4) சூரன் போர்

10. நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' நாடகத்தை முதலில் தயாரித்தவர்கள்
   (1) எங்கள் குழு
   (2) கூத்தாடிகள் குழு
   (3) அம்பலத்தாடிகள் குழு
   (4) மட்டக்களப்பு நாடக சபா

11. விழிப்பு நாடகம் அதன் ஆசிரியரால் எத்தனை அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
   (1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

12. சூரன் போர், காமன் கூத்து, பாஸ்கா போன்றன ஆடப்பெறும் அரங்க வெளிகள் முறையே
   (1) பொட்டல் வெளி, தேவாலய முன்றல், ஆலய வடக்கு வீதி
   (2) தேவாலய முன்றல், பொட்டல் வெளி, ஆலய வடக்கு வீதி
   (3) ஆலய வடக்கு வீதி, பொட்டல் வெளி, தேவாலய முன்றல்
   (4) ஆலய வடக்கு வீதி, தேவாலய முன்றல், பொட்டல் வெளி

13. பின்வருவனவற்றுள் 'கோலம' நாடகம் பற்றிய **தவறான** கூற்று
   (1) சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை எள்ளி நகையாடுவது
   (2) களிப்பூட்டுவதை நோக்கமாகக் கொண்டது
   (3) மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் ஆடப்படுவது
   (4) தாழ் நாட்டுப் பிரதேசங்களில் ஆடப்படுவது

14. 'காரிய கரவன ராள' எனப்படும் எடுத்துரைஞர் இடம்பெறும் சடங்காட்ட மரபு
   (1) சொக்கரி
   (2) கோலம
   (3) ரட்டயக்கும
   (4) சன்னியக்கும

15. 'தக அட்ட சன்னிய' நிகழ்த்தப்படுவதன் பிரதான நோக்கம்
   (1) பயிர் விளைச்சல், வளம் வேண்டுதல்
   (2) நோய் தீர்த்தல்
   (3) செழிப்பு, சௌபாக்கியம் வேண்டுதல்
   (4) குழந்தை வரம் வேண்டுதல்

16. பின்வரும் பாத்திரங்களுள் சொக்கரி நாட்டார் நாடகத்தில் வரும் பாத்திரம் **அல்லாதது**
   (1) சொக்கறி
   (2) பரிகாரி
   (3) அதிகாரி
   (4) மந்திரவாதி

17. பின்வரும் கூத்துகளில் தென்மோடிப் பாங்கில் அமைவது
   (1) இராவணேசன் நாடகம்
   (2) அலங்காரரூபன் நாடகம்
   (3) இராம நாடகம்
   (4) காத்தவராயன் நாடகம்

18. 'வாசகப்பா' எனும் நாடகம் பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம்
   (1) மன்னார்
   (2) முல்லைத்தீவு
   (3) மலையகம்
   (4) திருகோணமலை

19. இலங்கையில் வசந்தன் கூத்து **ஆடப்படாத** பிரதேசம்
   (1) மட்டக்களப்பு
   (2) மன்னார்
   (3) யாழ்ப்பாணம்
   (4) வன்னி

20. 'நாடகம' ஆடப்படும் 'கரலியவைப்' பொறுத்தவரை பார்ப்போர்
   (1) ஒரு பக்கமிருப்பர்.
   (2) இரண்டு பக்கமும் இருப்பர்.
   (3) மூன்று பக்கங்களில் இருப்பர்.
   (4) சுற்றிவர இருப்பர்.

21. பின்வரும் கூற்றுகளில் பாடசாலை நாடகத்தின் பண்பெனக் கூற **முடியாதது**
   (1) பாடசாலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடித்துக் காட்டப்படுவது
   (2) வளர்ந்தோருக்குரிய நாடகங்களின் இயல்பைக் கொண்டிருப்பது
   (3) 3-10 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்காக தயாரிக்கப்படுவது
   (4) கல்வி சார்ந்த விடயங்களாகக் கொண்டும் தயாரிக்கப்படுவது

[பக். 3 ஐப் பார்க்க

For More Past Papers : tamilguru.lk

22. பாத்திரச் சித்திரிப்பின் போது அக நிலைச் சித்திரிப்புக்கு உதவுவது
(1) காட்சி விதானிப்பு
(2) வேட உடை ஒப்பனை
(3) ஒளி விதானிப்பு
(4) குரல் வெளிச் சித்திரிப்பு

23. நடிகர் தேர்வில் ஒரு பாத்திரத்தினூடாக இன்னொரு பாத்திரத்தைத் தெரிவு செய்யும் முறை
(1) நேர்முகத் தெரிவு
(2) மறைமுகத் தெரிவு
(3) திறந்த தெரிவு
(4) சல்லடைத் தெரிவு

24. இசை நாடகங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்
(1) உடுக்கு, பறை என்பனவாகும்.
(2) தப்பு, சல்லரி என்பனவாகும்.
(3) ஹார்மோனியம், மிருதங்கம் என்பனவாகும்.
(4) மத்தளம், சவணிக்கை என்பனவாகும்.

25. பின்வருவோருள் இசை நாடகக் கலைஞர் **அல்லாதவர்**
(1) ஏரம்பு சுப்பையா அண்ணாவியார்
(2) நாகமணிப்போடி அண்ணாவியார்
(3) அண்ணாவியார் பொன்னாலைக் கிருஸ்ணன்
(4) நடிகமணி வீ. வீ. வைரமுத்து

26. இசை நாடகத்தின் பிரதான இயல்பு
(1) ஆடலும் நடிப்பும்
(2) ஊமமும் நடிப்பும்
(3) பாடலும் நடிப்பும்
(4) உரையாடலும் நடிப்பும்

27. ஈழத்தில் இயல்பான பேச்சு மொழியைக் கையாண்டு இயற் பண்புவாத முறையில் நாடகங்களை எழுதியவர்
(1) சு. வித்தியானந்தன்
(2) கலையரசு சொர்ணலிங்கம்
(3) க. கணபதிப்பிள்ளை
(4) மகாகவி உருத்திரமூர்த்தி

28. கிராமங்களில் ஆடப்பட்ட கூத்துக்களை செம்மையாக்கம் செய்து புத்தாக்கம் செய்தவர்
(1) சு. வித்தியானந்தன்
(2) மு. நித்தியானந்தன்
(3) ம. நித்தியானந்தன்
(4) அராலியூர் சுந்தரம்பிள்ளை

29. பின்வருவனவற்றுள் கூத்தின் வடிவத்துள் சமகாலத்துக்குரிய கதைப் பொருளைப் புகுத்தி ஆக்கப்பட்ட நாடகம் **அல்லாதது**
(1) சங்காரம்
(2) கந்தன் கருணை
(3) பொறுத்தது போதும்
(4) வாலிவதை

30. சு. வித்தியானந்தனின் முறையைப் பயன்படுத்தி சூர்ப்பனகை சபதம் எனும் கூத்தினைத் தயாரித்தவர்
(1) பாசையூர் பாலதாஸ்
(2) அருணா செல்லத்துரை
(3) க. தம்பிராசா
(4) மத்திய சிஞ்ஞோ

31. 1978 களில் அரங்கச் செயற்பாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடக நிறுவனம்
(1) திருமறைக் கலாமன்றம்
(2) அரங்க செயற்பாட்டுக்குழு
(3) செயல்திறன் அரங்க இயக்கம்
(4) நாடக அரங்கக் கல்லூரி

32. "விளக்கும் விரல்களும்" எனும் நாடகத்தை எழுதி தயாரித்தவர்
(1) அ. தாசீசியஸ் (2) வி. எம். குகராஜா (3) சி. மௌனகுரு (4) பி. சீ. ஆனந்தராஜா

33. ம. சண்முகலிங்கம் எழுதிய 'ஆர்கொலோ சதுரர்' ஒரு
(1) இசை நாடகமாகும்.
(2) பாடசாலை நாடகமாகும்.
(3) நாட்டிய நாடகமாகும்.
(4) சிறுவர் நாடகமாகும்.

34. இலங்கை அவைக்காற்று கலைக்கழகத்தில் பிரதானமானவர்கள் என கணிக்கப்படுவோர்
(1) வண. மரிய சேவியர் அடிகளார், பேக்மன் ஜெயராசா, பேர்மினஸ் ஆகியோர்.
(2) ஏ. ஜே. கனகரட்னா, க. பாலேந்திரா, நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர்.
(3) ம. சண்முகலிங்கம், அ. தாசீசியஸ், வி. கந்தவனம் ஆகியோர்.
(4) நா. சுந்தரலிங்கம், சி. மௌனகுரு, பௌசுல் அமீர் ஆகியோர்.

[பக். 4 ஐப் பார்க்க

tamilguru.lk
For More Past Papers : tamilguru.lk

16179

35. அவைக்காற்று கலைக்கழகம் மேடையேற்றிய 'அரையும் குறையும்' நாடகத்தை எழுதியவர்
(1) பாதல் சர்க்கார் (2) நா. முத்துசாமி
(3) கிரிஸ் கர்னாட் (4) மோகன் ராகேஷ்

36. நாடகமொன்றில் காட்சிகளையும் பொருட்களையும் ஒழுங்குபடுத்திக் கொள்பவர்
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர்
(3) மேடை முகாமையாளர் (4) நடிகர்

37. நடிகர் ஒருவர் வேட முகம் ஒன்றை அணிவதன் நோக்கம் எனக் கொள்ள **முடியாதது**
(1) தன்னை உருமாற்றுதல் (2) பாத்திரத்தை சுட்டுதல்
(3) அழகானவராகக் காட்டுதல் (4) வகிக்கும் பாத்திரத்திற்கு அழுத்தம் கொடுத்தல்

38. பின்வரும் உரையாடலை அவதானித்து அதன் கீழுள்ள வினாவிற்கு விடை எழுதுக.
A - எனக்கிப்ப இரண்டில ஒண்டு தெரிய வேணும். அவன் இப்ப வேலை செய்யப் போறானோ இல்லையோ
B - வேலை கிடைத்தால் போவான் தானே
C - வேலை கிடைக்கிறது ஐமிச்சம் எண்டு மாமாட்டச் சொல்லுங்கோ
மேலே குறிப்பிட்ட 'விழிப்பு' நாடகத்தில் வரும் A, B, C ஆகிய பாத்திரங்கள் முறையே
(1) கார்த்திகேசு, சிவக்கொழுந்து, சந்திரன் (2) சிவக்கொழுந்து, கார்த்திகேசு, சந்திரன்
(3) சந்திரன், சிவக்கொழுந்து, கார்த்திகேசு (4) சிவக்கொழுந்து, சந்திரன், செல்வி

39. கா. சிவத்தம்பி அவர்கள் எழுதிய அரங்க ஆய்வு நூல்களுள் ஒன்று
(1) ஈழத்து இசை நாடக வரலாறு (2) ஈழத்து நாடக வரலாறு
(3) பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் (4) வட இலங்கை நாட்டார் அரங்கு

40. படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகத்துறைக்கு பெரும் பங்காற்றிய இவர்
(1) வி. வி. வைரமுத்து
(2) க. பாலேந்திரா
(3) அ. தாசீசியஸ்
(4) நா. சுந்தரலிங்கம்



tamilguru.lk

**

[பக். 5 ஐப் பார்க்க

For More Past Papers : tamilguru.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

51 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

නාට්‍ය හා රංග කලාව I, II
நாடகமும் அரங்கியலும் I, II
Drama and Theatre I, II

## நாடகமும் அரங்கியலும் II

**முக்கியம்:**
**முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) நாடகத்தின் தோற்றம் பற்றிய அரிஸ்டோட்டலின் கருத்து யாது? (01 புள்ளி)

(ii) தென் இந்தியாவில் 'கதகளி' ஆடப்படும் பிரதேசம் யாது? (01 புள்ளி)

(iii) இலங்கையில் 'ஆற்றுகை' எனும் அரங்க சஞ்சிகையை வெளியிடும் நிறுவனம் யாது? (01 புள்ளி)

(iv) அர்ச்சுனன் தபசு இலங்கையில் எப்பிரதேசத்தில் ஆடப்படுகிறது? (01 புள்ளி)

(v) வாய் மொழியைப் பயன்படுத்தாது நடித்துக் காட்டும் நடிப்பு நுட்ப முறை யாது? (01 புள்ளி)

(vi) 'பொய்க்கால்' எனும் பிரபல்யமான நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(vii) நாடகக் கலைஞர் கலைச்செல்வன் எழுதிய நாடகமொன்றைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(viii) சட்டியும் குட்டியும், அரசனின் புத்தாடை போன்ற சிறுவர் நாடகங்களை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(ix) பேராசிரியர் சு. வித்தியானந்தன் புத்தாக்கம் செய்து மேடையேற்றிய **இரண்டு** கூத்துகளின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(x) தொலைக்காட்சி நாடகத்திற்கும் வானொலி நாடகத்திற்கும் இடையே காணப்படும் **இரண்டு** பிரதான வேறுபாடுகள் யாவை? (02 புள்ளிகள்)

**2.** (i) ஆற்றுகைக் கலை எனக் கருதப்படும் நாடகத்தின் பிரதான பண்புகள் **ஆறைக்** குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) மேடை நாடகமானது
  (அ) வானொலி நாடகம்
  (ஆ) தொலைக்காட்சி நாடகம்
  (இ) சினிமா

ஆகியவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (06 புள்ளிகள்)

**3.** நாடகம் ஒன்றிற்காக நடிகர் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(i) நடிப்பின் போது பாத்திரம் ஒன்றை ஏற்கும் நடிகர் பெற வேண்டிய பயிற்சிகள் யாவை? (03 புள்ளிகள்)

(ii) அப்பயிற்சிகள் ஒவ்வொன்றினதும் பிரதான பயன்பாடுகள் யாவை? (09 புள்ளிகள்)

**4.** பின்வரும் ஆற்றுகை மரபுகளை விளக்குக.

(i) பாண்டவர் வனவாசம் (03 புள்ளிகள்)

(ii) வேட்டைத் திருவிழா (03 புள்ளிகள்)

(iii) அர்ச்சுனன் தபசு (03 புள்ளிகள்)

(iv) திருப்பாடுகளின் காட்சி (03 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

For More Past Papers : tamilguru.lk

**5.** பின்வருவோர் இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக.

(i) கலையரசு சொர்ணலிங்கம் (04 புள்ளிகள்)

(ii) ம. சண்முகலிங்கம் (04 புள்ளிகள்)

(iii) க. பாலேந்திரா (04 புள்ளிகள்)

**6.** (i) **எந்தையும் தாயும்** நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(ii) இந்நாடகம் நிகழ்த்தப்பட்ட போது அதன் அரங்கு எதுவாக இருந்தது? (02 புள்ளிகள்)

(iii) இந்நாடகத்தில் வரும் சங்கரப்பிள்ளை பாத்திரத்திற்கான வேட உடை, ஒப்பனை என்பவற்றை எவ்வாறு செய்வீர்? (04 புள்ளிகள்)

(iv) இந்நாடகத்திற்கான காட்சி விதானிப்பை மேற்கொள்ளும் போது மூன்று குடும்பங்களுக்குமான காட்சிப் பொருட்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீர்? (05 புள்ளிகள்)

**7.** நாடகமொன்றில் கட்புல அரங்க மூலகமாகத் திகழ்வதில் ஒளி விதானிப்பும் முக்கியமானதாகும்.

(i) நாடகமொன்றில் ஒளியின் பயன்பாடுகள் **மூன்று** தருக. (06 புள்ளிகள்)

(ii) ஒளி விளக்குகள் **மூன்றின்** பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) **மழை** நாடகத்தில் வரும் இறுதிக்காட்சிக்கு எவ்வாறு ஒளியமைப்பு செய்வீர்? (03 புள்ளிகள்)

* * *

tamilguru.lk

For More Past Papers : tamilguru.lk